மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண். 40 /2024

**வாக்குமூலம்: பி.வா.சா.1 – தினேஷ்குமார்**

**20.07.2026 : சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு சொந்த ஊர் பொள்ளாச்சி ஆகும். எனக்கு பூர்வீகம் குஜராத் ஆகும். நான் பிறந்து வளர்ந்தது பொள்ளாச்சியில் தான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் மர வியாபாரம் தொழில் செய்து வருகிறேன். நான் பைனான்ஸ் செய்து வருகிறேனா என்றால் இல்லை. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேனா என்றால் நான் தோட்டம் வாங்கியிருந்தேன். சில வருடம் விவசாயம் செய்து வந்ததேன். பிறகு தண்ணீர் இல்லாமல் விவசாயம் செய்ய இயலாமல் போனதால் மேற்படி தோட்டத்தை மனைகள் பிரித்து விற்பனைக்காக போட்டுள்ளேன். நான் நிலங்களை வாங்கி பிளாட் போட்டு அதிக விலைக்கு விற்பனை செய்கிறேனா என்றால் இல்லை. மார்கெட் விலைக்கு தான் விற்பனை செய்து வருகிறேன். பிளாட் போட்டு விற்பனை செய்வதற்கு நான் அப்ரூவல் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் அப்ரூவல் வாங்கியுள்ளேன். சர்வே எண்.97/1, 97/2 ல் 5 ஏக்கர் புஞ்சை நிலம், சர்வே எண்.151/2ல் 50 செண்ட் வாதிக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். அவர் எனக்கு விற்று விட்டார். சர்வே எண்.151/1ல் 6 ஏக்கர் 60 செண்ட் நிலமும், சர்வே எண்.156/3ல் 4 ஏக்கர் 48 செண்டும் வாதிக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். சர்வே எண்.151/1ல் 6 ஏக்கர் 60 செண்ட் நிலமும், சர்வே எண்.151/2 ல் 50 செண்டில் நான்குமால் கட்ட சுமார் 3 செண்ட் நிலமும் சர்வே எண்.156/3ல் 4 ஏக்கர் 48 செண்ட் நிலமும், ரூபாய் 4 இலட்சித்திற்கு வாதியிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

2. நான் கிரையம் வாங்கிய நிலத்தில் 402 தென்னை மரங்கள் இருந்தது என்றால் சரிதான். நான் வாங்கிய நிலத்திற்கு சர்வே எண்.151/1ன் வழியாக வண்டி வாகனங்கள் சென்று சர்வே எண்.156/3 ல் உள்ள நிலத்தை அனுபவித்துக் கொள்ள வண்டிப்பாதை பாத்தியம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்._நான் சட்ட விரோதமாக 10 ஏக்கர் 48 செண்ட் நிலத்தில் இருந்த தென்னை மரங்களை அழித்து விட்டு வீட்டு மனைப் பிரிவாக வீட்டு மனைகள் பிரித்துள்னேன் என்றால் இல்லை. நான் தென்னை மரங்களை வெட்டவில்லை, தென்னை மரங்கள் காய்ந்து போய் விட்டன. வெளியில் தண்ணீர் விலைக்கு வாங்கி தென்னை மரங்களை காப்பாற்ற முயற்சி செய்தோம். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுமார் 5 வருடத்திற்கு முன்பு மனை பிரிவாக பிரித்து 4 வீடுகள் கட்டி முடிக்காமல் அரைகுறைவாக உள்ளது என்றால் மேற்படி வீடுகள் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வந்ததால் அப்போது வீடுகள் கட்டி முடிக்காமல் இருந்தது. நான் சட்டவிரோதமாக அப்ரூவர் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் கிரையம் பெற்ற சர்வே எண்.151/2 ல் உள்ள 3 செண்ட் ஆனது சர்வே எண்.156/3 நிலத்திற்கு செல்வதற்கான வண்டிப்பாதையாக விடப்பட்டது என்றால் எனக்கு சர்வே எண்கள் ஞாபகமில்லை. நான் கிரையம் பெற்ற போது அரசாங்க ரோடு வழியாக போய் வரலாம் என்று ஆவணத்தில் 3 செண்ட் பாதை பாத்தியம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.151/2 ல் 3 செண்டிற்கு வடபுறமும், தென்புறமும் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றால் சரிதான். வாதிக்கு இடையூறு செய்யும் நோக்கத்தில் நான் 2 ஆம் பிரதிவாதிக்கு 27.02.2023 ஆம் தேதி பாதை சம்பந்தமாக தான ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. 2 ஆம் பிரதிவாதி வாதியின் உரிமைக்கு மாறாக 13.01.2023 ஆம் தேதி பாதை சம்பந்தமாக பதிவு செய்வதற்கு ஆட்சேபனை இல்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதியால் எனக்கு சர்வே எண்.151/2 ல் பாதைக்காக 3 செண்ட் பாதைக்காக சுமார் 1308 சதுரடி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையை தான் எனக்கு பாத்தியப்பட்ட நிலங்களுக்கு சென்று வர கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நானும் 2 ஆம் பிரதிவாதிக்கு கூடுதலாக 1900 சதுரடி என்று குறிப்பிட்டு தான பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மொத்தம் 2008 சதுரடி உள்ளது. அதில் 108 சதுரடி விட்டு தான் 1900 சதுரடி பதியப்பட்டது. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு உரிமையில்லாத சர்வே எண்.151/3 ல் வாதிக்கு பாத்தியப்பட்ட 600 சதுரடி நிலத்தை 2 ஆம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி கொடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் வாதிக்கு பாத்தியப்பட்ட 600 சதுரடியில் பாதை போடுவதற்காக 3 ஆம் பிரதிவாதி வந்த போது வாதி அவர்களை தடுத்து விட்டார் என்றால் சரிதான்.

4. வாதி கொடுத்த பாதையையே வாதி தடுத்தார். வாதி எனக்கு 600 சதுரடி கொடுக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும், 2 ஆம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து 3 ஆம் பிரதிவாதியை ஆலோசிக்காமல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் சொத்து சம்பந்தமாக முன்விரோதம் இருந்ததா என்றால் எனக்கு இல்லை, வாதிக்கு இருந்தது. எனக்கு வாதி மீது முன்விரோதம் இருந்ததால் தான் வாதிக்கு பாத்தியப்பட்ட 600 சதுரடி நிலத்தை அபகரிக்கும் நோக்கத்தில் 2 ஆம் பிரதிவாதிக்கு தான் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். நான் தவறான தகவலைக் கூறி பதிலறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரியல்ல. வாதி நேரிலும், பொது மனிதர்கள் மூலமாகவும் வழக்குச் சொத்தில் அவர்களுக்கு உரிமை உள்ளது என்று எடுத்துக்கோரியும் அதனை மதிக்காமல் நானும் மற்ற பிரதிவாதிகளும் வாதிக்கு இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உண்மைக்கு மாறாக உள்ளது என்றால் சரியல்ல. திண்டுக்கல் மாவட்டம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.127/2013 ல் நடந்த பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடியாகி அதன் மேல்

மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது பற்றி தெரியும். நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வந்தது மேல்முறையீட்டு வழக்குப் பற்றி தெரியாது. நான் சொல்வது பொய் என்றாலும் மேல்முறையீட்டு வழக்கு CMP No.16812/24ல் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. பஞ்சாயத்து ரோடு நெய்க்காரப்பட்டி மெயினிலிருந்து மேற்கு நோக்கி சர்வே எண்.150/1A1 ஏக்கர் 6 செண்ட் 95ல் மனையிடங்களாக பிரிக்கும் பட்சத்தில் வரும் பாதை வாதியின் சர்வே எண்.151/3 வரை வரையறுக்கப்பட்டுள்ளது அதில் வாதிக்கு பாத்தியப்பட்ட வீடுகள் உள்ளது என்றால் பாதைக்கு இரண்டு பக்கமும் வாதிக்கு பாத்தியப்பட்ட வீடுகள் உள்ளது.

6. சர்வே எண் ஞாபகமில்லை. 3 செண்ட் நிலத்தில் உள்ள பாதையை வாதியும் நானும் பொதுவாக நடந்து செல்வதற்காக கொடுக்கப்பட்டது என்றால் இருவருக்கும் போய் வரும் பொதுப் பாதை என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 3 செண்ட் பாதையை சர்வேயரை வைத்து அளந்து பார்த்தேனா என்றால் அளந்து பார்த்தேன். எப்போது அளந்தேன் என்றால் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு அளக்கப்பட்டது. நான் சர்வேயரை வைத்து அளந்ததற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் சொல்வது பொய் என்றாலும், நான் சொல்வது போல் 3 செண்ட் நிலத்தை அளவீடு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பல வருடங்களாக நான் சொல்வது போல் தென்வடல் பாதை இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.151/1 முன்பு சர்வே எண்.156/3 நிலம் உள்ளது என்றால் சர்வே எண் ஞாபகமில்லை. அதில் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் சேர்த்து நான் தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் நிரூபண வாக்குமூலத்தில் தாவா பாதையை 3 ஆம் பிரதிவாதி சுவாதீனம் எடுத்து விட்டார் என்று கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. தாவா பாதையான 20 அடி அகலம் 95 அடி நீளமுள்ள பாதைக்கு சட்டப்படி அரசாங்கத்தால் அனுமதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் பஞ்சாயத்திற்கு கொடுத்த பாதையைத் தான் வாதி பயன்படுத்தி வருகிறார் என்று கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. சர்வே எண்.151/2ல் மேல் கோடியில் சுமார் 20 அடி அகலத்தில் தென்வடலாக Detailed பொது வண்டிப்பாதை செல்கிறது என்று கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. மேற்படி பாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் 8வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்து பொய் என்றால் சரியல்ல. தென்னை மரங்கள் வறட்சியானதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த சமயத்தில் ஆவணம் எதுவும் வாங்கவில்லை. நான் 2ஆம் பிரதிவாதிக்கு நடந்த 27.02.2023 ஆம் தேதி எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட 600 சதுரடி இடத்தை நானும் பிரதிவாதிகளும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்றால் சரில்ல. 10 வருடத்திற்கு மேல் வாதி எதையும் செய்ய விடவில்லை.

8. தாவாப் பாதையைப் பொறுத்து 18.08.2024 ஆம் தேதி 2 ஆம் பிரதிவாதி கொடுத்த தீர்மானத்தை ஆட்சேபித்து வாதி தாக்கல் செய்யப்பட்ட மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. நான் நிரூபண வாக்குமூலத்தில் 15 வது பத்தியில் சொல்லப்பட்ட சங்கதிகள் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் வாதியை அவமதிக்கும் நோக்கத்தில் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அப்ரூவல் வாங்காமல் மனையிடங்கள் போட்டதாக என்மீது பொய்யாக விளம்பரம் செய்வதால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. CRLMP 645/2025 எண் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கிற்கும், மேற்படி குற்றவியல் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.